(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க் காணும் சட்டமுன்வடிவுகள் 1971-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள் சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு திருத்தமேதுமின்றி நிறைவேறியதாக சட்ட மன்ற மேலவை தலைவரிடமிருந்து அறிக்கை வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/1971).

2. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 41/1971).

மேலும், தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1971) சட்ட மன்ற மேலவையில் 15—12—1971-ம் நாளன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதும் செய்யவில்லை என்றும் அறிவிப்பு வரப் பெற்றுள்ளது.

(5) அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர் களே, சட்டப் பேரவை 21 (3) விதியின்கீழ், "இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள 'அரசினர் தனித் தீர்மானங்கள்' என்ற தலைப்பின்கீழுள்ள இனம் (2) & (3) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பட்ட பிறகு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்," என முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1971)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: Even on excess Demands I would like to say something.